www.Padasalai.Net www.Trbtnpsc.Com

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

## எட்டாம் வகுப்பு

**நேரம் : 1.30 மணி** **தமிழ்** **மதிப்பெண்கள் : 50**

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:-** 14×1=14

அ) பொருள் தருக.

1. கிளை
2. முரலும்

ஆ) பிரித்து எழுதுக.

1. களைக்களை
2. பாடறிந்து

இ) சேர்த்து எழுதுக

1. முறை + எனப்படுவது
2. என்று+ஆய்ந்து

ஈ) கோடிட்ட இடத்தை நிரப்புக

1. அரசனை அவரது ________ காப்பாற்றும்.
2. காட்டிலிருந்து வந்த ________ கரும்பைத் தின்றன.

உ) சரியான விடையை எடுத்து எழுதுக.

1. நம்மை ________ ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.
   அ) இகழ்வாரை ஆ) அகழ்வாரை இ) புகழ்வாரை
2. தோட்டத்தில் தம்பி ஊன்றிய ________ எல்லாம் முளைத்தன
   அ) சத்துகள் ஆ) வித்துகள் இ) பித்துகள்

ஊ) பொருத்துக

1. பெயரெச்சத் தொடர் - கார்குழலி படித்தாள்
2. வினைமுற்றுத்தொடர் - பாடி முடித்தாள்
3. எழுவாய்த் தொடர் - எழுதியப்பாடல்
4. வினையெச்சத் தொடர் - வென்றான் சோழன்

**II. அகரவரிசைப்படுத்துக:-**

படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுதி, உடுக்கை, தவண்டை, பிடில், நாககரம், மகுடி

**III. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக:-** 4×2:

1) தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக்கருவிகளாகக் கந்தர் கூறுவன யாவை
2) பண்பு. அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
3) எவற்றையெல்லாம் கைவினைக்கலைகள் எனக் கூறுகிறோம்?

CamScanner

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com



4) அரசன் தண்டிக்கும் முறை யாது?

5) பயிர்கள் வாட்டமின்றிக் கிளைத்து வளரத் தேவையானது யாது?

IV. ஏவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக:- 2×2=4

1) உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?

2) பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?

3) மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?

V. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க:- 2×3=6

1) நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக?

2) மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக?

3) தொகை நிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

VI.அ) மரபுத்தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக: 2×1=2

1. முழுவதும்

2. வாழையடிவாழை

ஆ) கலைச்சொற்களை எழுதுக. 2×1=2

1. Horn

2. Flute

VII. அடிமாறாமல் எழுதுக:- 2+4=6

1) "சொல்" என முடியும் குறளை எழுதுக.

2) "ஆற்றுதல் என்பது" எனத் தொடங்கும் பாடறிந்து ஒழுகுதல் பாடலை எழுதுக.

VIII. எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடை தருக:- 1×6=6

1) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

2) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

****/****

www.Padasalai.Net

CS CamScanner

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com